RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s2523

OPEN ACCESS

# திருவாசகம் குறிப்பிடும் விளையாட்டில் மகளிரின் பக்திநெறி

க.ச. பவானி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையில் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்- 641043, தமிழ்நாடு, இந்தியா

# The Devotion of the Woman in the Sports Referred in Thiruvasakam

K.S. Bhavani [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641 043, Tamil Nadu, India

* Corresponding Author: bhavani_tam@avinuty.ac.in

Received: 12-08-2022
Revised: 29-10-2022
Accepted: 17-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Bhakti is a noble quality inherent in everyone. Thus, the devotion of an individual can spread to a group and the state of improvement in devotion can be known. Giving a place to women in any organization like politics, science, medicine, spirituality etc. is still in practice till date. Bharatiyar says that because men and women are equal and knowledge will flourish. In this article we can see the position of Manikavasar among Saivism people and the devotion of women who play their own role in all the organizations and expressed in their sports.

**Keywords:** Bhakti, Thiruvasakam, Devotion, Manikavasar

## முன்னுரை

சைவம் தழைக்க பாடுபட்ட அறுபத்தி மூன்று நாயன்மார்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அப்பரடிகள், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆவார். இவர்கள் “சைவ சமய குறவர்கள்” அல்லது “சைவ சமயச்சாரிகள்” என்று அழைக்கப்படுகின்றனர். கீர்த்தி வாய்ந்த "சீவன் முக்தர்கள்" என்றும், ஒவ்வொருவரும் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற மார்க்கத்தைக் கடைப்பிடித்து முக்தி அடைந்தவர்கள் என்றும் கூறுவர். இவற்றில் மாணிக்கவாசகர் பின்பற்றிய மார்க்கம் “ஞானத்தில் ஞானம்” ஆகும். மற்ற மூன்று சைவ சமய குறவர்கள் பின்பற்றிய மார்க்கத்தை காட்டிலும் இது மிகவும் உன்னத மார்க்கமாகும். சைவ சமயக்குறவர்களில் மாணிக்கவாசகர் தனியிடம் பெறுகிறார். மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தை படிக்கும் கால் சிவத்தின் பால் கொண்டுள்ள அயராத உறுதியான அன்பு புலப்படும். உலக வாழ்வும் வாழ்வில் கண்ட பெரும் போகமும் நிலை இல்லை என்பதை உணர்ந்தார். சிவஞானம் கைவரப்பெற்ற வாதவூரர் உள்ளக் கனிவோடு பல பாடல்களை தன் குருமீது பாடினார். குருந்த மேவிய குருநாதரும் இவர் பாடல்கள் அருளொளி வீசும் மாணிக்கவாசகமாக இருத்தலுக்கு மகிழ்ந்து வாதவூரருக்கு "மாணிக்கவாசகர்" என்ற திருநாமம் சூட்டினார். இத்தகைய சிறப்பு பொருந்திய மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகம் தேனினும் இனிய அழகிய பாமாலைகளைக் கொண்டது. இறைவனின் புகழை பல நிலைகளில் பாடிய மாணிக்கவாசகர் மகளிரின் விளையாட்டிலும் இறைவனின் புகழைப் புலப்படுத்துகின்றார். மகளிர் விளையாட்டுகளில் திருவம்மானை, திருத்தெளேணம், திருச்சாழல் திருப்பூழல்லி, திருவுந்தியார், திருத்தோணேக்கம்

திருப்பொன்னூசல் போன்ற விளையாட்டுகளிலும் இறைவனின் பெருமையை பல நிலைகளில் எடுத்து இயம்புகின்றார். திருவாசகத்தில் விளையாட்டில் மகளிரின் பக்தி நெறியினை காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## திருவம்மானை

மகளிர் ஆடும் விளையாடல்களில் ஒன்று அம்மானை,

“அம்மனை தங்கையிற் கொண்டாங் கணியிழையார்

தம்மனையிற் பாடும் தகையேலோ ரம்மானை”

அம்மானை ஆடும்போது இறைவன் புகழைப்பாடி மகளிர் ஆடுவர் (Puliyur Kesigan, 2007). இவ்விளையாட்டில் மூன்று மகளிர் உடனமர்ந்து விளையாடுவர். ஒருத்தி இறைவன் புகழ் குறித்து வினாக்கேட்க, இரண்டாமவள் அதற்கு விடைகூற, மூன்றாமவள் அப்புகழ்ச் செயலைத் தொடர்ந்து கூறிப் பாராட்டும் முறையில் அமைவது. ஆக மூவரும் சேர்ந்து இறைவன் புகழைப் போற்றிப் பாடுவர்.

“வீங்குநீர்வேலி உலகாண்டு விண்ணவர்கோன்

ஓங்கரணம் காத்த உரவோன்யா அம்மானை

ஓங்கரணங் காத்த உரவோன் உயர்விசும்பில்

தூங்கெயில் மூன்றெறிந்த சோழன் காண்அம்மானை

சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை” (Puliyur Kesigan, 2007)

என்பது சிலப்பதிகாரம் கூறும் பாட்டுடைத் தலைவன் புகழ் பற்றிய அம்மானைப் பாடலாகும். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் வரும் திருவம்மானைப் பாடல்கள் மகளிர் பலரும் சேர்ந்து

“பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்

பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்

விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்

கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை

மண்சுமந்து சடலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு

புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கான் அம்மானை”

என இறைவன் புகழைப் பாடி மகிழ்ந்ததாக அறிய முடிகின்றது (Maraimalai Adigal, 1940).

## திருக்கோத்தும்பி

தும்பி என்பது ஒருவகை வண்டு. தலைமைத் தும்பி கோத்தும்பி எனப்படும். நறுமலரில் படிந்து தேனுண்டு மகிழ்ந்த வண்டு, மகிழ்ச்சி மிகுதியால் தேனுள்ள மலரையே சுற்றிச்சுற்றிப் பறத்தலைப் போன்று, விளையாடும் பருவத்து இளமகளிர் மகிழ்ச்சி மிகுதியால் ஒருவருக்கொருவர் கைகோத்துக் கொண்டு சுற்றி விளையாடும் விளையாட்டே தும்பி பறத்தல். இதில் ஈடுபட்ட மகளிர் கோத்தும்பியை முன்னிலைப்படுத்தி, இறைவனது தேனார் கமலத் திருவடித் தாமரையிலேயே சென்று படிந்து அவனது திருப்புகழாகிய இசையினையே இடைவிடாது இசைக்கும் வண்ணம் வேண்டிப் பாடுமாறு அமைந்த பனுவலாதலின் திருத்கோத்தும்பி என்னும் பெயருடையதாயிற்று. தும்பி பறந்து விளையாடும்போது மகளிர் இறைவனது புகழ்பாடி விளையாடுவர்.

"குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்பது திருவாசகம் (Maraimalai Adigal, 1940).

## திருத்தெள்ளேணம்

சிறுமியர் மொச்சி (முச்சில்) என்னும் சிறிய முறத்தைக் கையில் கொண்டு தானியங்களைத் தௌலிக் கொழித்து விளையாடும் நிலையில் இறைவனது புகழ்பாடிப் போற்றி விளையாடுவது தெள்ளேணம். கொள்ளுதல் என்பது தானிய முதலியவற்றைக் கல்லும் மண்ணுமாகிய குற்றங்கள் நீங்கப் புடைத்து ஒதுக்கித் தூயனவாகத் தனியே பிரித்து எடுத்தல். "பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்று வரும் குறிப்பால், இவ்விளையாட்டு பாட்டுக்கேற்ப கைகொட்டியோ பறைகொட்டியோ இயற்றப்பெறும் விளையாட்டாக இருக்கலாம் எனக் கருதுதலும் உண்டு. தெள்ளேணம் கொட்டி விளையாடும்போது மகளிர் இறைவனின் புகழைப் பாடி ஆடியதாக திருவாசகம் கூறுகிறது.

## திருச்சாழல்

சாழல் என்பது மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று. சிலப்பதிகாரத்துள் அடியார்க்கு நல்லார் உரையில் 'நல்லார்தம்தோள்வீச்சு நற்சாழல்' என்று கூறப்பெற்றுள்ளது. ஒரு பெண் இறைவனின் புகழையும், அழகையும் பற்றி வினாவ, மற்றொரு பெண் தோள்வீசி நின்று விடையளிப்பதான விளையாட்டு பல்வரிக் கூத்துள் ஒன்றென்னப்படுகிறது.

"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்

பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ

பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை

ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ"

என்று இறைவன் புகழ்பாடி ஆடினர் (Maraimalai Adigal, 1940).

## திருப்பூவல்லி

அழகிய பூக்களை உடைய கொடி எனப் பொருள்படும் மகளிர் பூக்கொய்து விளையாடும் விளையாட்டு. இறைவனுக்குச் சாத்துதற்கெனப் பூக்கொய்து விளையாடும் மகளிர், பூக்கொய்யும்போது இறைவனின் பொருள்சேர் புகழ் பாடிக்கொள்வர். 'கொய்யும் உள்ளிப்பூ' என்று சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார்,

"புணையாளின் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ"

என்று குறிப்பிடுகின்றார் (Maraimalai Adigal, 1940).

## திருவுந்தியார்

இது உந்திபறத்தல் என்ற விளையாட்டைக் குறிக்கும். இரண்டு பெண்கள் விளையாடும்போது ஒருத்தி இறைவன் புகழைப்பாட, மற்றொருத்தி அப்புகழால் விளைந்த பயனைக் கூறுவதாக அமைந்தது. 'உந்திபறத்தலாவது தனது தலைவன் வெற்றியை வாயாரப் புகழ்ந்து கொண்டு உயர உழுந்து குதித்து விளையாடுதல் பெரியாழ்வார் திருமொழியில் என்று பெரியாழ்வார் திருமொழியில் குறிப்புக் காணப்படுகின்றது. உந்தி என்பது விளையாடும்பருவத்து இளமகளிர் உயர எழுந்துகுதித்தலாகும் குதித்துவிளையாடும் போது இறைவன் புகழைப் பாடி ஆடுவர் (Vellaivaranar, 2015).

"சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்

ஓடியவா பாடி உந்தீபற

உருத்திர நாதனுக்கு உந்தீபற"

என திருவாசகம் குறிப்பிடுகின்றது (Maraimalai Adigal, 1940).

## திருப்பொன்னூசல்

ஊசல் - ஊஞ்சல். ஊஞ்சலில் ஏறியாடுதல் மகளிர்க்கு மனமகிழ்ச்சி விளைக்கும் விளையாட்டாகும். இளமகளிர் ஊஞ்சலில் அமர்ந்து ஆடும்போது இறைவனின் புகழ்பாடி ஆடுவர். இது ஊசல்வரி எனப்படும். சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக் காதையில் வரும் ஊசல் வரிப்பாடல்கள் மூன்றும் சேர மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுபாடப்பெற்றன. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் அருளிய திருப்பொன்னூசல் இறைவனைத் தலைவனாகக் கொண்டு ஊசலாடும் மகளிர் அவன் புகழைப் பாடிக்கொண்டு ஆடுவது, செல்வ மிகுதி தோன்ற ஆடும் மகளிரது ஊசல் பொன்னூசல் எனப்பட்டது.

"சீரார் பவளங்கால் முத்தம் கயிறாக

ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து

நாராயணன் அறியா நானண்மலர்த்தாள் நாயடியேற்கு

ஊராகத் தந்தருளும் உத்தரகோச மங்கை

ஆரா அமுதில் அருட்டா லிணைபாடிப்

போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ"

இவ்வாறெல்லாம் மகளிர் விளையாடி மகிழ்ந்து ஆடிப்பாடும்போது கூட இறைவன் புகழையே பாடி ஆடி மகிழ்ந்தனர் (Maraimalai Adigal, 1940).

## திருக்கோத்தும்பி

தும்பி என்பது ஒருவகை வண்டு. தலைமைத் தும்பி கோத்தும்பி எனப்படும். நறுமலரில் படிந்து தேனுண்டு மகிழ்ந்த வண்டு, மகிழ்ச்சி மிகுதியால் தேனுள்ள மலரையே சுற்றிச்சுற்றிப் பறத்தலைப் போன்று, விளையாடும் பருவத்து இளமகளிர் மகிழ்ச்சி மிகுதியால் ஒருவருக்கொருவர் கைகோத்துக் கொண்டு சுற்றி விளையாடும் விளையாட்டே தும்பி பறத்தல். இதில் ஈடுபட்ட மகளிர் கோத்தும்பியை முன்னிலைப்படுத்தி, இறைவனது தேனார் கமலத் திருவடித் தாமரையிலேயே சென்று படிந்து அவனது திருப்புகழாகிய இசையினையே இடைவிடாது இசைக்கும் வண்ணம் வேண்டிப் பாடுமாறு அமைந்த பனுவலாதலின் திருத்கோத்தும்பி என்னும் பெயருடையதாயிற்று. தும்பி பறந்து விளையாடும்போது மகளிர் இறைவனது புகழ்பாடி விளையாடுவர்.

"குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்பது திருவாசகம் (Maraimalai Adigal, 1940).

## திருப்பொற்சுண்ணம்

திருக்கோயில்களில் இறைவனது திருமெயப்பூச்சுக்கு உரிய பொன்னிறமான மணப்பொடியினை இடிககும்போது மகளிர் இறைவன் புகழைப் பாடிக் கொண்டே இடிப்பர்."

"ஆடப்பொற்சுண்ணம் இடித்தும் நாமே" என்று திருவாசகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் கூறப்பட்டுள்ளது. நறுமணப் பொருட்களில் பொன்னறிச் சுண்ணமே சிறந்தது.

"பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்

புன்காய்ச் சுண்ணம்"

என்று பெரும்பாணாற்றுப்படை கூறும் (Somasundaranar, 1960). பண்டைக் காலத்தில் நறுமணப் பொடியிடிக்கும் பணியை மகளிரே மேற்கொண்டிருந்தனர் என்பது,

"பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தார்"

என்ற மதுரைக்காஞ்சித் தொடரால் புலப்படுகின்றது (Somasundaranar, 1960). இறைவன் திருமஞ்சனத்திற்குரிய சுண்ணத்தை இடிக்கும்போது அதற்குரிய இடத்தினை மெழுகித் தூய்மை செய்து முத்துமாலை முதலியவற்றால் அழகுசெய்து முளைக்குடம் வைத்துத் தூபதீபம் முதலியன அமைத்துக் கவரிவீசிக் கொடியெடுத்துச் சிறப்புச் செய்தல் வேண்டும். சுண்ணம் இடிக்கும் கருவியாகிய உரலுக்குப் பட்டுசாத்தி உலக்கைக்குப் பொற்பூண் முதலியன அணிந்து 'நேசம் உடைய அடியார்கள் நீடுவாழ்க' என வாழ்த்தி இறைவனைப் பாடிச் சுண்ணமிடித்தல் மரபு.சுண்ணம் இடிக்கும் குழுமிய மகளிராக சத்தி, சோமி, பார்மகள், நாமகள், சித்தி, கௌரி, பார்வதி, கங்கை என எண்மர் குறிக்கப்பட்டுள்ளனர்.

நாம் பெற்றுள்ள உடல், கருவி, உலகு, நுகர்பொருள் ஆகிய இவையாவும் தம்பாலுள்ள வாலாமை நீங்கித் தூயவனாய் இறைவனது திருமெய்ப்பூச்சுக்கு ஏற்ற இனிய நறுமணப் பொடியாய் நுணுகும்படி அவற்றை மாற்றியமைத்தருளும் வண்ணம் அருட்சத்திகளை அழைப்பது இத்திருப்பொற்சுண்ணத்தின் உட்கிடை என்பர் பெரியோர் (Vellaivaranar, 2015).

இறைவன் திருமஞ்சனம் ஆடுதற்குரிய சுண்ணப் பொடியை இடிக்க வேண்டுமானால், அதற்கு உலகமே உரலாகவும், மேருமலையே உலக்கையாகவும் மெய்ம்மையாகிய உயர்ந்த குணமே மஞ்சளாகவும் கொண்டு இறைவன் திருவடியினைப் பாடிப்பாடி, செம்பொன் உலக்கையை வலக்கையில் கொண்டு இடிக்கவேண்டும்.

"வையக மெல்லாம் உரலதாக

மாமேரு வென்னும் உலக்கைநாட்டி

ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே" (Maraimalai Adigal, 1940)

என்று மகளிர் இறைவன் புகழைப் பாடிச் சுண்ணமிடித்ததைத் திருவாசகம் கூறும்.

## முடிவுரை

சிற்றில் கட்டி விளையாடும் பருவத்திருந்தே பெண்கள் தாங்கள் விளையாடுகின்ற விளையாட்டுகளில் இறைவன் புகழைப் பேசியும் பாடியுமே ஆடினர். மகளிர் விளையாட்டுப் பருவத்திலேயே இறைவன்மேல் பக்தி கொண்டவர்களாக விளங்கினர் என்பதும் இதனால் பெறப்படுகின்றது. பக்தியில் மகளிர் பங்கே பெரும்பங்கு என்பதும் புலனாகின்றது என்பது இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது.

## References

Maraimalai Adigal, (1940) Thiruvasagam, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Puliyur Kesigan, (2007) Silappathikaram, Paari Nilayam, Chennai, India

Somasundaranar, P.V. (1960) Pathupattu Thoguthi, Kalaga Veliyedu, Chennai, India

Vellaivaranar, (2015) Panniruthirumurai Varalaru, Annamalai University, Chidambaram, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License